**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 47 /2022 PW1**

22.04.2025 **வா.சா.1 பிரியா சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என் கணவர் சாப்ட்வேட் கம்பெனியில் ஹவுஸ் கீப்பங் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறார். பிரதிவாதி எனது வீட்டில் இருந்து 4 வீடு தள்ளி தான் வசித்து வருகிறார். 2016ல் பிரதிவாதியின் மகன் திருமணத்திற்காக ரூ. 5 லட்சமும், அடமானம் வைத்த அவரது நிலத்தை மீட்பதற்காக ரூ. 5 லட்சத்தை 2017ம் வருடம் 3ம் மாதத்தில் பிரதிவாதி வாங்கினார். மேற்படி இரண்டு தொகையை பிரதிவாதி பெற்றதற்கும் தனித்தனியாக புரோ நோட்டு எழுதி வாங்கிக் கொண்டேன். ஒரே புரோநோட்டு அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2020ம் வருடம் பாவாடையிடம் ஒரு புரோ நோட்டு வாங்கப்பட்டது. ரூ. 10 லட்சத்தை பிரதிவாதியின் வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். எத்தனை பண்டில் கொடுத்தேன் என்று தற்போது நியாபகம் இல்லை. நான் பணம் பிரதிவாதிக்கு கொடுத்த போது சாட்சிகள் பார்த்தார்கள். புரோ நோட்டை பிரதிவாதி தான் வாங்கி வந்து அவர் வீட்டில் பணத்தை வாங்கிக்கொண்டார். புரோ நோட்டில் முதலாவதாக பிரதிவாதி கையொப்பம் இட்டார், இரண்டாவதாக உமா கையொப்பம் இட்டார் மூன்றாவதாக முருகானந்தம் கையொப்பம் இட்டார். பிரதிவாதியின் வீட்டை சுற்றி குடியிருப்பவர்கள் எனக்கும், பிரதிவாதிக்கும் தெரிந்தவர்கள் தான் என்றால் சரிதான். முதல் சாட்சி உமா மஜார் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். எனது ஊரான கொட்டையூர் கிராமத்திற்கும் மஜார் கிராமத்திற்கும் இடையே சுமார் 40 கி.மீட்டர் தூரம் இருக்கும். இரண்டாவது சாட்சி முருகானந்தம் போளூரைச் சேர்ந்தவர். பிரதிவாதி நிறைய பேரிடம் கடன் வாங்கி விட்டதால் அது தெரிந்த வீட்டைச் சுற்றி வசிக்கும் நபர்கள் சாட்சியாக இருக்க முன்வரவில்லை அதனால் எனது நண்பர்களாக சாட்சி உமா மற்றும் முருகானந்தத்தையும் வரவழைத்தேன். வழக்கு புரோ நோட்டை பொய்யாக நான் தயார் செய்ததால் தான் எங்கள் வீட்டின் அக்கம் பக்கம் உள்ளவர்கள் சாட்சியாக இருக்க வரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த காலத்திலும் எனக்கு வழக்கு புரோ நோட்டை எழுதிக் கொடுக்கவேயில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு 72 வயதாகிறது என்றும், அவருக்கு மேற்படி வயதில் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ரூ. 10 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு என்னிடம் போதிய வருவாய் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என் கணவரிடம்

கடந்த 31.03.2010 தேதியிட்ட கிரைய பத்திரம் முன்னிலைக்கு 13 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் மிக குறைவான தொகைக்கு மேற்படி நிலத்தை பிரதிவாதிக்கு விற்று விட்டார் என்றும், ஆகவே நான் பிரதிவாதியிடம் சென்று மேலும் ரூ. 25 லட்சத்தை மேற்படி கிரையத்திற்காக கொடுக்க வேண்டும் என நான் கேட்டேன் என்றால் சரியல்ல. 2010ல் கிரையம் பெற்ற நிலத்திற்காக மேற்படி நான் கேட்டுக் கொண்ட தொகையை பிரதிவாதி தர முடியாது என மறுத்து விட்டார் என்றால் சரியல்ல. உன்னிடம் எப்படி பணம் வாங்க வேண்டும் என எனக்கு தெரியும் என்றும், நீதிமன்றத்தில் வழக்கு போட்டு நான் பணத்தை பெறுவேன் என பிரதிவாதியிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. எங்களிடம் நிலத்தை வாங்கக்கூடிய அளவிற்கு பொருளாதார நிலையில் உள்ள பிரதிவாதி என்னிடம் ரூ. 10 லட்சம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் வருடம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை நாங்கள் போலியாக போட்டோம் என்றும், அதனால் தான் வா.சா.ஆ.1ல் கண்டுள்ள பிரதிவாதியின் 2வது கையொப்பத்தில் துணை எழுத்து "ர" இடைச்சொருகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த காலத்திலும் என்னிடம் வழக்கு தொகையோ அல்லது வேறு எந்த பணமும் பெற்றதில்லை என்றும், நான் என் நண்பர்களை வைத்து கொண்டு அவர்களது உதவியுடன் தாவா புரோ நோட்டை ஜோடித்தேன் என்றால் சரியல்ல. வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 47 /2022 PW2**

22.04.2025 **வா.சா.2 உமா சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் மஷார் கிராமத்தை சேர்ந்தவர் தற்போது திருவண்ணாமலையில் வசிக்கிறேன். நான் தான் வழக்கு புரோ நோட்டை எழுதினேன். 2020ல் மார்ச் மாதம் பாண்டு எழுதப்பட்டது, ஆனால் வழக்கு பணமானது 2016ல் பிரதிவாதியின் மகன் திருமணத்திற்காக கொடுக்கப்பட்டது. பணம் பிரதிவாதி வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது. வாதியும், பிரதிவாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்கும் போது என்னை ஏன் சாட்சியாக அழைத்தீர்கள் என நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை, நண்பர் என்ற முறையில் என்னை அழைத்தார்கள். 2009ம் வருடத்தில் இருந்தே வாதிக்கு நான் நண்பர். எனது மூத்தாரிடம் வாதி சீட்டு போட்டு இருந்தார் அந்த வகையில் வாதி எங்கள் ஊருக்கு வந்து போவார் அந்த சமயங்களில் அவர் எனக்கு பழக்கமானார். 2ம் சாட்சி முருகானந்தம் எனது மூத்தாரிடம் சீட்டு போட்டாரா என்றால் இல்லை. முருகானந்தத்தின் மனைவி எனக்கு பழக்கமானவர். 2020க்கு முன்பாக பிரதிவாதி வாதியிடம் வாங்கிய தொகை குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான், வாதி, மற்றும் சாட்சி முருகானந்தம் ஆகியோர் சீட்டு தொழில் மூலம் அறிமுகமானவர்கள் என்றும், அதனால் நாங்கள் அனைவரும் சேர்ந்து வழக்கு புரோ நோட்டை போர்ஜரியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. 2016ல் ரூ. 5 லட்சத்தை பிரதிவாதி வாதியிடம் வாங்கியதை மட்டும் நான் பார்த்தேன். வழக்கு புரோ நோட்டை பிரதிவாதி தான் வாங்கி வந்தார். வழக்கு புரோ நோட்டு எழுதும் போது பணம் ஏதும் கைமாறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி புரோ நோட்டில் கையொப்பம் இட்டார். நான் முதலாவதாக கையொப்பம் இட்டேன். முருகானந்தம் இரண்டாவதாக கையொப்பம் இட்டார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் வருடம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல ஆனால் Overwriting செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஐ நான், வாதி, சாட்சி முருகானந்தம் ஆகியோர் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கில் பொய்யாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 47 /2022 PW3**

22.04.2025 **வா.சா.3 முருகானந்தம் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் போளூரில் வசித்து வருகிறேன். நான் ஆரம்பத்தில் டைலராக வேலை செய்தேன் தற்போது திருவண்ணாமலை ஸ்பார்ஸா ஓட்டலில் நான் செக்கியூரிட்டியாக வேலை செய்து வருகிறேன். வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முதலில் ரூ. 5 லட்சம் 2016ல் கொடுத்தார். அதை நான் நேரடியாக பார்த்தேன். அதன் பிறகு ரூ. 5 லட்சம் கொடுத்தார், தேதி எனக்கு சரியாக தெரியவில்லை. பணத்தை பிரதிவாதியின் வீட்டில் வைத்து வாதி கொடுத்தார். நான் கடை வைததிருந்த இடுக்கு பிள்ளையார் கோயிலுக்கும், வாதியின் கொட்டையூர் கிராமத்திற்கும் இடையே சுமார் 20 கி. மீட்டர் இருக்கும். இரண்டாவதாக பணம் கொடுத்ததையும் நான் பார்த்தேன். சாட்சி உமா வீட்டின் அருகே நான் வசித்து வருகிறேன். அந்த வகையில் அவரை எனக்கு தெரியும். வாதி பிரியா சாட்சி உமா வீட்டிற்கு அடிக்கடி வருவார். அந்த வகையில் எனக்கு அவர் பழக்கம் ஆனார். என்னை சாட்சியாக அழைத்த போது வாதியின் ஊரில் உள்ள நபர்களை சாட்சியாக அழைக்காமல் என்னை ஏன் அழைத்தீர்கள் என கேட்டேனா என்றால் இல்லை. புரோ நோட்டை நான் போகும் போது எழுதி வைத்திருந்தார்கள். பிரியா தான் பணம் கொடுத்தார். நான், வாதி பிரியா, சாட்சி உமா ஆகியோர் சீட்டு கம்பெனி நடத்தி வருகிறோம் என்றும், பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தாவா புரோ நோட்டை பொய்யாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததையும் பார்க்கவில்லை என்றும், பாவாடை, உமா கையொப்பம் போட்டதையும் நான் பார்க்கவில்லை என்றும், புரோ நோட்டை பொய்யாக தயார் செய்து போடப்பட்ட வழக்கில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.